தினமணி

பவானிசாகர் அணையின் நீர்மட்டம் 32.57 அடி

First Published : 04 Aug 2012 09:40:57 AM IST

ஈரோடு, ஆக.3: பவானிசாகர் அணை நீர்மட்டம் வெள்ளிக்கிழமை நிலவரப்படி 32.57 அடியாக இருந்தது.

அணைக்கு விநாடிக்கு 179 கனஅடி நீர் வந்தது. அணையில் இருந்து ஆற்றில் விநாடிக்கு 1,300 கனஅடி நீர் திறந்துவிடப்பட்டது. பாசனத்துக்காக கால்வாயில் தண்ணீர் திறக்கப்படவில்லை. அணையில் நீர் இருப்பு 1.44 டி.எம்.சி.

---

தினமலர்
உண்மையின் உரைகல்

ஒரு வாழை இலை 10 ரூபாய்: ஆடிப்பெருக்கில் எகிறியது விலை



காரைக்கால்: ஆடிப்பெருக்கு விழாவையொட்டி, காரைக்காலில் பூஜை பொருட்கள் விலை கிடுகிடுவென உயர்ந்தது. ஒரு வாழை இலை, 10 ரூபாய்க்கு விற்கப்பட்டது.
காவிரியின் கடைமடைப் பகுதியான காரைக்காலில் ஆடிப்பெருக்கு விழா நேற்று நடந்தது. இதையொட்டி, பூஜை பொருட்களின் விலை நேற்று கிடுகிடுவென உயர்ந்தது. காரைக்காலுக்கு காய்கறிகள் அனைத்தும் நாகை, திருச்சி, தஞ்சாவூர், கும்பகோணம் பகுதியில் இருந்து வருகிறது. நகரப் பகுதியில் உள்ள பழமையான நேரு மார்க்கெட்டில், சில நாட்களுக்கு முன், இரண்டு ரூபாய்க்கு விற்கப்பட்ட ஒரு வாழைப் பழம் @நற்று, ஐந்து அல்லது ஆறு ரூபாய்க்கு விற்கப்பட்டது. அதேபோல் வாழை முழு இலை ஒன்று, 10 ரூபாய்க்கு விற்பனை செய்யப்பட்டது. பூக்கள் மற்றும் காய்கறிகளின் விலையும் நேற்று உயர்ந்திருந்தது.

---

தினகரன்

துவரையில் அதிக மகசூல் பெற நாற்று விட்டு நடவு முறை பின்பற்ற வேண்டும் வேளாண்மை அதிகாரி தகவல்

பதிவு செய்த நேரம்:2012-08-04 10:57:36

திருவண்ணாமலை, :துவரையில் அதிக மகசூல் பெற நாட்டு விட்டு நடவு முறையை பின்பற்றுங்கள் என்று வேளாண்மை அதிகாரி தெரிவித்துள்ளார்.
திருவண்ணாமலை மாவட்ட வேளாண்மை இணை இயக்குனர் சக்கரவர்த்தி விடுத்துள்ள அறிக்கை:
திருவண்ணாமலை மாவட்டத்தில் ஆண்டுதோறும் சுமார் 1200 எக்டேர் பரப்பளவில் துவரை

சாகுபடி செய்யப்பட்டு வருகிறது. பொதுவாக விவசாயிகள் நேரடி விதைப்பு முறையை கையாண்டு வருகின்றனர். நேரடி விதைப்பு முறையில் எதிர்பார்த்த அளவிற்கு மகசூல் கிடைப்பது அரிதான ஒன்று. எனவே துவரையில் குறிப்பாக மத்திய மற்றும் நீணடகால வயதுடைய ரகங்களில் விவசாயிகள் நாற்றுவிட்டு நடவு முறை துவரை சாகுபடியை கடைபிடித்தால் அதிக மகசூல் பெறலாம்.

நமது மாவட்டத்தில் இந்த புதிய தொழில் நுட்பத்தை ஊக்குவிக்கும் வகையில் தேசிய வேளாண்மை வளர்ச்சி திட்டத்தின் கீழ் மானிய விலையில் இடுபொருட்களுடன் செயல்விளக்கங்கள் விவசாயிகளுக்கு வழங்கப்படுகிறது.

நடவு முறை சாகுபடி தொழில்நுட்பம் மத்திய மற்றும் நீண்டகால ரகங்களுக்கு மட்டுமே சாத்தியமாகும். ஏக்கருக்கு ஒரு கிலோ விதை போதுமானது. ஒரு கிலோ விதைக்கு 4 கிராம் டிரைகோடெர்மா விரிடி உயிரியல் பூச்சிக்கொல்லி மருந்தினை கலந்து விதை நேர்த்தி செய்திடவேண்டும். மண்மாதிரி ஆய்வு செய்து, அதன் அடிப்படையில் பேரூட்ட மற்றும் நுண்ணூட்ட சத்து உரங்களை இடவேண்டும். மேலும் விவரங்களுக்கு தங்கள் வட்டார வேளாண்மை உதவி இயக்குனர்களை தொடர்பு கொண்டோ அல்லது வேளாண்மை துறை மூலம் தங்கள் வட்டாரத்தில் வைக்கப்பட்டுள்ள விவசாய மானிய விண்ணப்ப பெட்டியில் விண்ணப்பித்து பயன்பெறுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

## பசுமை விருதுக்கு அறிக்கை சமர்ப்பிக்க ஆலோசனைக் கூட்டம்

பதிவு செய்த நேரம்:2012-08-04 10:55:31

திருப்பூர், :பசுமை விருதுக்கு மாவட்டத்தை தேர்வு செய்யும் வகையில் மாவட்ட அளவில் செயல்பாடுகளை ஆய்வு செய்து அறிக்கை தயாரிக்கும் பணி தொடங்கப்பட்டுள்ளது.

சுற்றுச்சூழல் பாதுகாப்பு, முழுமையான சுகாதாரம், மாசுக்கட்டுப்பாடு நடவடிக்கைகள் உள்ளிட்ட பசு மை யை காக்கும் விதமான செயல்பாடுகள் மற்றும் சிறப்பான நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ள மாவட்டங்களுக்கு தமிழக அரசு பசுமை விருது வழங்க உ ள்ளது.

இதற்காக, மாவட்டம்தோறும், அரசு துறைகள் வாரியாக இயற்கை மற்றும் பசுமை பாதுகாப்பு நடவடிக்கைகளுக்காக மேற்கொள்ளப்பட்டு வரும் நடவடிக்கைகள் குறித்து அறிக்கை சமர்ப்பிக்க வேண்டும். திருப்பூர் மாவட்டத்துக்கு, மாசுக்கட்டுப்பாட்டு வாரிய செயற்பொறியாளர் மதிவாணன் ஒருங்கிணைப்பாளராக நியமிக்கப்பட்டுள்ளார்.

பசுமை விருது பெற சம ர்ப்பிக்க வேண்டிய அறி க்கை குறித்து ஆலோசனை கூட்டம், கலெக்டர் அலுவலகத்தில் நேற்று நடந்தது. மாவட்ட வருவாய் அலு வலர் கஜலட்சுமி தலைமை வகித்தார். திட்ட இயக்குனர் சம்பத் முன்னிலை வகித்தார்.

மாநகராட்சி, போக்குவரத்து துறை, நெடுஞ்சாலைத்துறை, சுகாதாரத்துறை உள்ளிட்ட பல்வேறு துறை அலுவலர்கள் பங்கேற்றனர். கூட்டத்தில், பசுமை காக்கும் திட்டத்தில் அந்தந்த துறை வாரியாக மேற்கொள்ளப்படும் திட்டங்கள் மற்றும் அதன் செயல்பாடுகள் குறித்து விரிவாக அறிக்கை தயார் செய்வது குறித்து அறிவுறுத்தப்பட்டது.பிளாஸ்டிக் ஒழிப்பு, மரம் வளர்த்தல், ஒலி மற்றும் நீர் மாசுபாடு தவிர்க்கும் திட்டங்கள், நிலத்தடி நீர் சேமிப்பு முறைகள் உள்ளிட்ட பசுமை பாதுகாப்புக்காக மேற்கொள்ளப்பட்டுள்ள திட்டங்கள் மற்றும் அதன் செயல்பாடுகள் குறித்து அறிக்கை சமர்ப்பிப்பது குறித்து விளக்கப்பட்டது.

இதுகுறித்து ஒருங்கிணைப்பாளர் மதிவாணன் கூறுகையில், மாநில அளவில் அனைத்து மாவட்டங்களிலும் அறிக்கை கேட்கப்பட்டுள்ளது. திருப்பூர் மாவட்டத்தில் துறைவாரியாக அறிக்கைகளை பெற்று, தொகுத்து மாவட்ட நிர்வாகத்திடம் சமர்ப்பிக்கப்படும். அதன்பின், மாநில தலைமைக்கு அனுப்பப்படும். அங்கு அனைத்து மாவட்டங்களின் செயல்பாடுகள் பரிசீலிக்கப்பட்டு, தேர்ந்தெடுக்கப்படும் மாவட்ட நிர்வாகத்துக்கு பசுமை விருது வழங்கப்படும் என்றார்.